DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.89/2023

**prosecution witness: LW10 as PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோட்டைச்சாமி | தொழில் | : | சார்பு ஆய்வாளர், பாம்பன் காவல்நிலையம் |
| த/பெ. | : | முனியாண்டி | வயது | : | 40 |
| கிராமம் | : | பாம்பன் | சமயம் | : | |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**10.06.2025**

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை :-**

நான் தற்சமயம் சார்பு ஆய்வாளராக பாம்பன் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.05.2022ம் தேதி 12.30 மணிக்கு மண்டபம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மண்டபம் மறவர் தெருவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் மகன் அஜீத்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.100/2022, பிரிவுகள்.379 இதச கீழ் வழக்கு பதிவு செய்தேன்.

புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பிதேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

புகார் மனு, முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 19.05.2022-ம் தேதி 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன், முனீஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.7** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8** ஆகும்.

பின்பு சாட்சிகள் அஜீத்குமார், ரவிச்சந்திரன், கல்யாணி, கிருஷ்ணவேனி, சரவணன், முனீஸ்வரன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

அதன்பின்பு வழக்கின் எதிரியை 21.05.2022 -ம் தேதி 22.00 மணிக்கு இராமநாதபுரம் இரயில்வே ஸ்டேசன் பைக் ஸ்டாண்ட் முன்பு நின்ற எதிரி சத்தீஸ்வரனை கைது செய்து சாட்சிகள் சிவாஜி, பாண்டியராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் படி எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனம் TN 65 AJ 9420 பல்சர் வாகனத்தை கைப்பற்றி அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்தேன். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி "பைக்கை தங்களிடம் ஆஜர் செய்தேன்" அ.சா.ஆ.9 ஆகும். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் அது. **அந்த புகைப்படங்கள் (எண்ணம்–4) அ.சா.ஆ.11 ஆகும்.**

பின்பு எதிரியை உரிய வழிகாட்டுதலின் படி கைது செய்து வழக்கில் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தில் அசல் பதிவெண்ணை மறைத்து TN 65 AJ 3026 என்ற போலி நம்பர் பிளேட்டை மாற்றி, முன்பக்க நம்பர் பிளேட்டை பாதியாக உடைத்து வைத்திருந்த காரணத்தினால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இதசவிலிருந்து 379, 201 இதசவாக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பின்பு எதிரியை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும்.**

பின்னர் இவ்வழக்கு சொத்தை படிவம்–95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம்–95 அ.சா.ஆ.13** ஆகும்.

இறுதியாக எனது விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள்.379, 201 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வாகனம் காணாமல் போனதாக எத்தனை மணிக்கு புகார் வந்தது என்றால் 19.05.2022ம் தேதி 12.30 மணிக்கு தகவல் கிடைத்தது. வாகனம் எந்த இடத்தில் இருக்கிறது என்று எந்த தேதி தகவல் கிடைத்தது என்றால் 22.05.2022ம் தேதி 17.00 மணிக்கு புகார்தாரருடன் வேலை பார்க்கும் செந்தில் மகன் பப்லு என்ற சரண்ராஜ் மூலம் தகவல் கிடைத்து. அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல பட்டியல் சாட்சியாக 9 ஆக சேர்க்கப்பட்டுள்ளார்.

வாகனத்தை தேடி இராமநாதபுரத்திற்கு எந்த தேதியில் சென்றேன் என்றால் 22.05.2022ம் தேதி 18.00 மணியளவில் சென்றேன். யார், யார் சென்றோம் என்றால் நான், த.கா.சிவாஜி, பாண்டியராஜன் ஆகியோர் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். எவ்வளவு நேரம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் 22.00 மணி முதல் 23.00 மணி வரை வாங்கினேன்.

குற்றம்சாட்டப்பட்டவர் வாகனத்தை திருடியதாக நேரடி சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். வாகனக்காப்பகத்தில் இருந்து எதிரி எடுத்ததாக சொல்லப்படும் போது விடீயோ பதிவுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக வாகனக்காப்பகத்தில் வண்டியின் டோக்கன் யார் கொடுத்தாலும் வண்டியை விட்டுவிடுவார்கள் என்றால் சரிதான். எதிரி மீது எங்கள் காவல்நிலையத்தில் எந்த முன்வழக்கும் இல்லை என்றால் சரிதான் ஏர்வாடி காவல்நிலையத்தில் கு.எண்.239/2021, பிரிவு.457, 380 இதச வழக்கு உள்ளது. எதிரியை குறிப்பிட்டு

புகார்தாரர் புகார் கொடுக்கவில்லை என்றாலும், சாட்சியமளிக்கவில்லை என்றால் சரிதான்.

இராமநாதபுரம் இரயில்வே நிலையம் பைக் ஸ்டாண்ட் என்பது மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். வெளிநபர்கள் சாட்சிகள் யாரையும் வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் வெளிசாட்சிகள் யாரும் முன்வரவில்லை. வழக்கில் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 புகார்தாரரின் பெற்றோர், நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யாமல், பின்னிட்டு காவல்நிலையத்தில்வைத்து தயார் செய்து, சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரி நிரபராதி என்றாலும் சரியல்ல.

ஒம்/–S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.